இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 72 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 04 – திங்கள்கிழமை 21 அக்டோபர் 2024 – சென்னை 28 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 72 : Thiruvalluvar Year - 2055 - Ayppasi 04 - Monday 21 October 2024 - Chennai 28 Pages ₹ 5.00

# கூண்டு கண்டேன் ; குதூகலம் கொண்டேன்!



அன்று தமிழ்நாட்டில் அரங்கேறி கோர நர்த்தனம் புரிந்த கொடுங்கோல் ஆட்சியில், சட்டப் பேரவைச் சரித்திரத்திலேயே முதல்முறையாக, புதிய கூண்டொன்று செய்யப்பட்டு, அதில் ஏற்றப்பட்டார் முரசொலி செல்வம் அவர்கள்.

**இதயத்தில் ஆறா வீரமும், இதழோரத்தில் மாறாப் புன்னகையும், இதய மையத்தில் எதையும் தாங்கும் உறுதியும் கொண்டு, அமைதியின் திருவுருவாக அன்பின் உருவகமாக, சுயமரியாதைச் சின்னமாம் கருப்புச் சட்டை அணிந்து, நெஞ்சு நிமிர்த்து நின்றார் முரசொலி செல்வம் - பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாத்திடவும், ஜனநாயக மாண்புகளை உணர்த்திடவும்.**

அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், அருமை அண்ணன் முரசொலி மாறன் அவர்களும், மகிழ்ச்சி – பெருமை பொங்கிட அவரை வழி அனுப்பி வைத்தனர்.

முரசொலி செல்வம் அவர்கள், சபை நடுவே கூண்டேற்றப்பட்டதைப் பற்றி கலைஞர் முரசொலியில் தீட்டிய “உடன்பிறப்புக் கடிதம்”, கழகத்தின் அழியாத காவியமாய், அழகுதமிழ்ச் சொல்லோவியமாய், நிலைத்து நின்று, கழகம் கடந்து வந்த கட்டான மைல் கல்லை என்றைக்கும் நினைவூட்டிக் கொண்டே இருக்கிறது.

சென்னை அண்ணா அறிவாலயம் – கலைஞர் அரங்கில், திராவிட நாயகர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள், நம்மிடையே நடமாடிக் கொண்டிருந்த முரசொலி செல்வம் அவர்களின் படத்தைத் திறந்து வைப்பதை ஒட்டி, கலைஞர் அவர்களின் கடிதத்தை மீண்டும் வெளியிடுகிறோம்.

- **முரசொலி**
ஆசிரியர் குழு

## கலைஞர் கடிதம்

**உடன்பிறப்பே,**

**“சிங்கத்தை நரியடிக்கும் திறமில்லை யென்றாலும்**
**பொங்குற்றே சிங்கம் மடிந்ததென்றால் நரிமனம் பூரிக்காதா?”**

இப்படிப் புரட்சிக்கவிஞர் ஏக்கமுற்று இதயம் குமுறி கண்ணீர் சிந்தினார்.

தந்தை பெரியார் தவித்துப் போனார். கண்ணீர்க் கடலானார்.

அறிஞர் அண்ணா எழுத்திலே அவரது இதயத்திலிருந்து கசிந்த இரத்தக் கண்ணீரைக் கண்டோம்.

**“கோமானே! யாம் அழுதழுது வடிந்த கண்ணீர்**
**ஓமான் கடல் ஆயிரத்தை வெற்றி கொள்ளும்”**

என நானும் இரங்கல் கவிதை வரிகளைத் தீட்டினேன்.

இந்தியாவின் ஆலோசகராக இங்கிலாந்து அரசின் வேண்டுகோளின் பேரில் இலண்டன் மாநகருக்குச் செல்ல ‘அனிபால்’ எனும் விமானம் ஏறி, நீதிக் கட்சியின் தன்னேரில்லாத் தளபதி சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்கள் பயணம் செய்தபோது அவர் அமர்ந்திருந்த அந்த விமானம் ஓமான் கடலில் வீழ்ந்து, தமிழர்களின் செல்வத்தை திராவிடர்களின் செல்வத்தை – நம்மிடமிருந்து பிரித்துத் தொலைத்தது.

1940 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் நாள்தான் இந்தத் தாங்க முடியாத சோகம் தமிழ் மக்களை நிலை குலையச் செய்தது. காணாமற் போனதாகச் சொல்லப்பட்ட அனிபால் விமானம்; எங்கேயாவது ஓரிடத்தில் கண்டுபிடிக்கப் பட்டுப் பன்னீர்செல்வம் பத்திரமாக உயிரோடிருக்கிறார் எனச் செய்தி வராதா என்று வானொலிப் பெட்டிகள் இருக்குமிடங்களில் எல்லாம் செய்தியை எதிர்பார்த்து திரள்திரளாகக் காத்திருந்தவர்களில் நானும் ஒருவன்!

தமிழ்நாட்டுச் செல்வம் மட்டும் அல்லவே அவர், எங்கள் திருவாரூருக்கு அடுத்த பெரும்பண்ணையூரில் பிறந்து வாழ்ந்த செல்வமும் ஆயிற்றே!

இலண்டன் பயணத்தை முன்னிட்டு அவருக்கு ஆரூரில் தேநீர் விருந்தளித்து, அண்ணன் அழகிரிசாமி அவரைப் பாராட்டி வழியனுப்பி வைத்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு களிப்புற்ற இளைஞர்களில் நானும் ஒருவனாயிற்றே!

1940 மார்ச்சில் பன்னீர்செல்வம் மறைந்த சோக நிழல் இந்த மண்ணில் படிந்திருக்கும்போதுதான் அதே 1940 ஏப்ரல் திங்களில் என் சகோதரிக்கு ஒரு மகன் பிறந்தான். மறைந்தாலும்; மனத்தில் நிறைந்திருக்கும் பன்னீர் செல்வத்தின் நினைவாக அவனுக்கு நான் ‘பன்னீர் செல்வம்’ என்று பெயரிட்டேன்.

அந்தப் பன்னீர்செல்வம்தான் கடந்த 21-ஆம் நாள் சட்டப்பேரவைக் கூண்டிலே நிறுத்தப்பட்ட முரசொலி ஆசிரியர் செல்வம்!

செல்வம் பிறந்தபோதே, என் தாயார் என்னைப் பார்த்து, “உனக்கு ஒரு பெண் பிறந்தால் அதற்கு ‘செல்வி’ எனப் பெயரிட்டு செல்வத்துக்கே துணைவியாக்க வேண்டும்” என்று அன்புக் கட்டளை பிறப்பித்தார்கள். பாட்டியின் ஆசை நிறைவேறியது; ஆனால் அதை அந்த அன்புப் பாட்டியிருந்து பார்க்கவில்லை.

**அண்ணா தலைமையில், தந்தை பெரியார், மூதறிஞர் ராஜாஜி, காயிதே மில்லத் ஆகியோர் ஒரே மேடையில் தோன்றி மணமக்களை வாழ்த்தினர். அந்த மணக்கோலத்தில் செல்வத்தை நான் பார்த்த போதுகூட எனக்கு அத்தனை மகிழ்ச்சியில்லை!**

**புதுக்கோட்டை, திருச்சி நிகழ்ச்சிகளை முடித்துவிட்டுத் திரும்பும் போது தாம்பரம் ரயிலடியில் வாங்கிப் படித்த ஆங்கிலம், தமிழ் நாளேடுகள் அத்தனையிலும் செல்வம் சட்டப் பேரவைக் கூண்டில் சிரிப்பு தவழ நின்று கொண்டிருக்கும் படம் வெளிவந்துள்ளதைப் பார்த்த போதுதான் எனக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை.**

**வாடிய முகத்துடன் அந்தக் கூண்டுக்குள் செல்வம் நின்றிருந்தால்; என்னகம் வாடிப்போயிருக்கும்! அந்தச் செல்வத்தின் பெயரை இந்தச் செல்வத்துக்கு எத்துணைப் பொருத்தமாக அப்போதே வைத்தேன் என்று என்னையே நான் பாராட்டிக் கொண்டேன்; படத்தில் செல்வத்தின் முகத்தில் அரும்பி நிற்கும் புன்முறுவல் கண்டு!**

படத்தை அரசாங்க செய்தித் துறையே எடுத்து, அந்தத் துறையே அல்லவா எல்லா ஏடுகளுக்கும் அனுப்பி வைத்திருக்கிறது!

இது, மேலும் பூரிப்பு வழங்கும் தகவல் அல்லவா!

உடன்பிறப்பே, அந்தப் படத்தை உற்றுப் பார்த்தேன். செல்வம் நிற்கும் கூண்டுக்கு அருகே அறிஞர் அண்ணாவின் படம், நான் முதல்வராக இருந்த போது பிரதமர் அன்னை இந்திரா காந்தியை அழைத்து திறந்து வைக்கப்பட்ட படம்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற எழுத்துக்கள் ஒளி விடுகின்றன பார்த்தாயா!



தலைவர் கலைஞர் அவர்கள், முரசொலி ஆசிரியர் செல்வம் அவர்களை வழியனுப்பி வைத்த காட்சி!

உச்சநீதிமன்ற ஆணையை மதிக்க மாட்டேன் என்று ஆரவாரம் செய்யாமல்; உச்சநீதிமன்றத் தீர்ப்பை ஏற்று செல்வம், அந்தக் கூண்டுக்குள் நிற்கும் போது; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் அண்ணாவின் மொழிகள் செல்வத்தின் செயலைப் பாராட்டுவது போலவே அமைந்து ஒளிவிடுகின்றன அல்லவா?

அண்ணா, செல்வத்தை – மிகச் செல்லமாக ‘செல்வா’ என்றுதான் அன்பொழுக அழைத்து முரசொலிக்குத் தேவையான அறிவுரைகளைச் சொல்லுவார்.

**“இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
**கெடுப்பார் இலானும் கெடும்”**

எனக் குறள் கூறிய வள்ளுவரின் படமும் கூட!

செல்வத்தை இன்று ஆசிரியராகப் பெற்றுள்ள முரசொலிக்கு வயது ஐம்பது!

இந்த முரசொலி 1942 இல் தொடங்கப் பெற்று 1943 இல் முதல் ஆண்டு விழா கொண்டாடிய போது வருகை தந்து வாழ்த்தியவர்கள் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் பேராசிரியர் அன்பழகனார் அவர்களும்!

இன்று அந்த முரசொலியைக் கூண்டிலேற்றியது சரியென்று வாதாடுகிறார்; பேரவையில் நாவலர் நெடுஞ்செழியன்!

இது பத்திரிகை சுதந்திரத்தைப் பறிக்கும் பழி வாங்கும் செயல் என்று கண்டித்துக் கறுப்புச் சட்டை அணிந்து திருச்சி வீதியிலே மனிதச் சங்கிலி அறப்போருக்குத் தலைமையேற்று கொளுத்தும் வெயிலில் நிற்கிறார் பேராசிரியர்!



சட்டமன்றக் கூண்டில் முரசொலி ஆசிரியர் செல்வம்!

**அடையாறு மருத்துவமனையில் அண்ணாவுக்கு இறுதியாக ஓர் அறுவை சிகிச்சை அவசியம் தேவை என முடிவு செய்யப்பட்டபோதுகூட; அண்ணா அவர்கள் அந்த உடல் நலிவுடனும் “செல்வா எங்கே?” என அழைத்து, செல்வம் அவர் அருகில் சென்றதும் “செல்வா! வீட்டில் உள்ள பிள்ளைகளை அழைத்து வா! நான் பார்க்க வேண்டும்” என்று கூறியதை எப்படி மறக்க முடியும்.**

அந்தப் பாசமுள்ள பெருந்தலைவனின் படத்தருகே கூண்டு! அதிலே செல்வம்! மன்றத்தில் ஜனநாயகம் போற்றிய பல தலைவர்களின் படங்கள்!

என்னே அரசியலின் விசித்திரம்!

**“எல்லோரையும் தாங்கிட ஒரு தாயின் வயிறு போதாத காரணத்தால் தனித்தனித் தாய்மார்களின் வயிற்றில் பிறந்த சகோதரர்கள் நாம்”** எனப் பெருமையுடன் கூறிப் பெருமிதம் கொண்ட அண்ணா அவர்கள், இன்றில்லாதது அவர் வரையில் அவருக்குக் கிடைத்த பேறுதானே!

இல்லையா உடன்பிறப்பே! எப்படியோ **கூண்டு கண்டேன்; நான் குதூகலம் கொண்டேன்!**

**- அன்புள்ள**
**மு.க.**

(முரசொலி - 23.9.1992)